Australian Government
Department of Immigration and Border Protection

# ஊடக வெளியீடு (Media release)

## ஆட்கடத்தலை முறியடிப்பதற்கான ஒத்துழைப்பை அவுஸ்திரேலியாவும் இலங்கையும் வலுப்படுத்துகின்றன

**13 செப்டம்பர் 2017**

ஆட்கடத்தலை முறியடிப்பது தொடர்பாக அவுஸ்திரேலியாவும் இலங்கையும், இரு நாடுகளுக்கும் இடையில் நெருங்கிய ஒத்துழைப்பைச் சாத்தியமாக்கும் புரிந்துணர்வு உடன்படிக்கையில் (Memorandum of Understanding) (MOU) கையொப்பமிட்டதன் மூலம் இப்பகுதியில் செயல்புரியும் ஆட்கடத்தல்காரர்களுக்கு இன்று எதிர்பாரத அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளன.

ஆட்கடத்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் இலங்கைக்குத் திரும்புவதை MOU எளிதாக்கும். ஆட்கடத்தல்காரர்களின் நடமாட்டங்களைக் கண்காணித்தல், தடுத்து நிறுத்தல் மற்றும் விசாரணை செய்தல் ஆகிய செயல்முறைகள் குறித்த மேலும் கூடுதலான தகவல் பகிர்வுக்கு இது வழிவகுக்கிறது.

இந்த MOU, குடிவரவு மற்றும் எல்லைப் பாதுகாப்புத் துறையின் செயலாளர் (Department of Immigration and Border Protection Secretary) Michael Pezzullo மற்றும் இலங்கை பாதுகாப்புச் செயலாளர் (Sri Lankan Secretary for Defence) Kapila Mudantha Waidyaratne ஆகியோரினால் கான்பெராவில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கையொப்பமிடப்பட்டது.

ஆட்கடத்தலை எதிர்த்துப் போராடுவதற்கும், அவுஸ்திரேலியாவிற்கு சட்டவிரோதமாகப் படகுப் பயணங்களில் தங்கள் உயிர்களுக்கு ஆபத்து உண்டாவதிலிருந்து மக்களைத் தடுக்கவும், இலங்கை உட்பட சர்வதேச பங்காளிகளுடன் அவுஸ்திரேலியாவின் வலுவான மற்றும் கூட்டான உறவுகள், அதனுடைய பல்வேறு அணுகுமுறைகளில் ஒரு முக்கிய பகுதியாக அமைகின்றது.

இறையாண்மையுடைய எல்லைகள் நடவடிக்கை (Operation Sovereign Borders) 2013 இல் தொடங்கியதில் இருந்து, இலங்கையிலிருந்து அவுஸ்திரேலியாவுக்கு ஆட்கடத்தும் ஒவ்வொரு முயற்சியும் தோல்வியடைந்து விட்டது. இந்த வெற்றி தொடர வேண்டும் என்று இரண்டு நாடுகளும் உறுதியாக இருப்பதை இந்த MOU நிரூபிக்கிறது.

ஆட்கடத்தலை முறியடித்தல், சட்டவிரோதப் பொருட்களின் இடப்பெயர்வை நிறுத்துதல், பண மோசடி செய்வதையும் குற்றச் செயலால் பணமீட்டலையும் இலக்காகக் கொண்டு செயலாற்றுதல் தொடர்பாக இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பை இந்த உடன்படிக்கை மேலும் மேம்படுத்தும்.

அவுஸ்திரேலியாவிலும் இலங்கையிலும் பயிற்சி பெறுதலும், இணைந்து செயலாற்றுதலும், இரு முகவர்களுடைய அதிகாரிகளும் தங்களுக்குரிய வேலைத் திறமைகளை மேம்படுத்துவதற்கும், நெருக்கமான தொழில்சார் உறவுகளை வளர்ப்பதற்கும் வாய்ப்பளிக்கும்.

ஆட்கடத்தல் மற்றும் பல்வேறு நாடுகடந்த குற்றங்கள் தொடர்பாக இலங்கையுடன் வெற்றிகரமான நீண்ட ஒத்துழைப்பு வரலாற்றை அவுஸ்திரேலியா கொண்டுள்ளது. இன்றைய ஒப்பந்தம் இந்த வகையான ஒத்துழைப்புத் தொடரவும், விரிவடையவும் ஒரு வலுவான அறிகுறியை வழங்குகிறது.

**ஊடகத் தொடர்பு :** குடிவரவு மற்றும் எல்லைப் பாதுகாப்பு (Immigration and Border Protection) (02) 6264 2244.

ஆட்கடத்தலுக்கெதிரான MOU (புரிந்துணர்வு ஒப்பந்தம்) இல் ( குடிவரவு மற்றும் எல்லைப்பாதுகாப்புச் செயலாளர் (Immigration and Border Protection Secretary) Michael Pezzullo அவர்களும் இலங்கைப் பாதுகாப்புச் செயலாளர் Kapila Mudantha Waidyaratne (Sri Lankan Secretary for Defence) உம் கைச்சாத்திட்டனர்.